DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.176/2025

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | சங்கரபாண்டியன் (Lw - 4) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 24.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், பரமத்தி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2025 முதல் 2026ம் வருடம் வரை நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன்.

கடந்த 20.04.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு எனது வாய்மொழி உத்தரவுபடி தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோர் சேந்தமங்கலம் காவல்நிலைய சரகம் காளப்பநாயக்கன்பட்டி துத்திக்குளம் பெரியபள்ளம் பாரை ஆகிய மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தபோது காலை 10.00 மணிக்கு பெரியபள்ளம்பாரை செல்வம் என்பவர் தோட்டத்தில் சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தை வைத்துக்கொண்டு சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் கள்ளை வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தவரை பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் செல்வம் த.பெ.பெரியன்னநாடார் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக அரசு கள்ளை விற்பனைக்கு வைத்துள்ளதாக கூறியதால் ஆஜர் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த கள்ளுடன் நிலையம் வந்து சம்பவம் தொடர்பாக தலைமை காவலர் திரு.மோகன்குமார்

தனியறிக்கையுடன் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த கள்ளுடன் தலைமை காவலர் திரு.ரஞ்சித்குமார் அவர்களிடம் ஒப்படைத்தார். தலைமை காவலர் திரு.ரஞ்சித்குமார் மேற்படி தனியறிக்கையின் பேரில் சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.128/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை எனது பார்வைக்கு வைத்தார்.

நான் வழக்கை என்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 12.10 மணிக்கு ஆஜர் எதிரியை நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்தேன் பின்னர் ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன்.

ஆஜர் எதிரி செல்வம் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், பள்ளாம்பாரையை சேர்ந்தவர் என்றும் பனை மரத்தில் இருந்து கள்ளை இறக்கி விற்பனை செய்து வந்ததாகவும் தான் வைத்திருந்த கள்ளை விற்பனைக்கு வைத்திருந்ததாகவும் கூறினார்.

பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தில் இருந்த 3 லிட்டர் கள்ளை அஜர் செய்தார். அதை தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் அந்த கள்ளை அழித்தல் மகஜர் மூலம் கீழே ஊற்றி அழித்தேன். கள்ளை அழிக்கும்போது தலைமை காவலர் திரு.மோகன்குமார் புகைப்படம் எடுத்தார்.

பின்னர் 20.04.2025ம் தேதி தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோர் உடன் சம்பவ இடம் சென்றேன். மாலை 15.00 மணிக்கு பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(**மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

பின்னர் தலைமை காவலர் திரு.மோகன்குமார், தலைமை காவலா் திரு.விஜயக்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.ரஞ்சித்குமார் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன்

விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் நான் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரித்து தனியறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகள் கள்தானா என்பதை ஆய்வுக்கு அனுப்பி நிரூபிக்கும் வண்ணம் மாதிரி ஏதேனும் சேகரிக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரி கள்ளை எங்கு வைத்து விற்றார் என்றால் எதிரியின் தோட்டத்திற்கு அருகில் வைத்து விற்றார். அது ஒரு வண்டிபாதையாகும். எதிரி கள் விற்பனை செய்வதற்காக பயன்படுத்தியதாக சொல்லப்படும் சொம்பை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து பணம் எதுவும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

அ.சா.ஆ.1 புகைப்படத்தில் பனைமரம் இருப்பதாக எதுவும் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என எதிரியிடம் கூறி அதனை ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி கள்ளை வைத்திருக்க பயன்படுத்தியதாக கூறும் குடத்தை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரி கள் இறக்கி விற்பனை செய்யவில்லை என்றாலும் புள்ளிவிபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**